பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 14 புதன்கிழமை 27.03.2024 கதிர் 141

## கல்லீரல் சிகிச்சை நிலையம் ராகமவில் நேற்றுத் திறப்பு

இலங்கை மக்களுக்கு உயர்தர சுகாதார சேவையை வழங்குவதை உறுதி செய்வதற்காக கொழும்பு வடக்கு ராகம போதனா வைத்தியசாலையில் நிறுவப்பட்ட 'எம். எச். ஓமார் விசேட கல்லீரல் நோய்சிகிச்சைநிலையம்' நேற்றுபிற்பகல்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு வடக்கு போதனா வைத்திய சாலைக்கு வருகை தந்த ஜனாதிபதியை, வைத்தியசாலையில் வெற்றிகரமாகமேற்கொள் ளப்பட்ட கல்லீரல் சத்திர சிகிச்சையின் மூலம் குணமடைந்த சிறுமியொருவர் வரவேற்றார்.

இலங்கையில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மத்தியில் நாள்பட்ட கல்லீரல் நோயின் பாதிப்பு அதிகரித்து வருகிறது. கல்லீரல் செயலிழப்புக்கு கல்லீரல் மாற்றுஅறுவைசிகிச்சை மட்டுமே பயனுள்ள சிகிச்சையாகும். ☞2

## விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு சட்டத்தை இடைநிறுத்த தீர்மானம்

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்டஅறவீட்டுச் சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்தேசியகொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப் பட்ட முடிவுகள் வருமாறு:

இருநூற்றுப்பத்து ☞8

## சீன ஜனாதிபதி, பிரதமருடன் இலங்கைப் பிரதமர் சந்திப்பு

சீன அரசின்ன் அழைப்பின் பேரில் பிரதமர் தினேஷ் குணவர்தன உத்தியோகபூர்வ பயணமாக அங்குசென்றுள்ளநிலையில் பீஜிங்கில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் பிரதமர் லீ கியாங் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் சீன கம்யூனிஸ கட்சியின் உயர் அதிகாரிகளை சந்தித்து இரு தரப்பு உறவுகள் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பாக கலந்துரையாடவுள்ளார். ☞2

## இது ரகசியம் அல்ல!

இந்தியாவின் அந்நியச் செலாவணிஇருப்பு, அதாவது டொலர் கையிருப்பு கடந்த மாதத்தில் 642.49 பில்லியன் என்று ரொய்ட்டர்ஸ்செய்தி நிறுவனம்தெரிவித்திருக்கிறது. கடந்த வாரத்தில் மட்டும் இந்தத் தொகை 6.4 பில்லியனால் அதிகரித்திருக்கிறதாம்.

இந்த வருடத்தில் இந்தியப் பொருளாதாரம் 7.6 சதவீதம் வளரும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. உலகின் பெரும் பொருளாதாரங் களிலேயே அதிகபட்ச வளர்ச்சியைக் காட்டுகின்றதாக இந்தியப் பொருளாதாரமே உள்ளது. அமெரிக்கப் பொருளாதாரம்கூட இந்த ஆண்டு 2.2 சதவீதமே வளரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில் இந்தத் தகவல் வெளியாகியிருக்கின்றது. இந்தியாவின்மத்தியில்ஆளும்மோடி அரசின்பொருளாதாரக்கொள்கைக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்று இது கொண்டாடப்படுகின்றது. இதன் மூலம் மூன்றாவது முறையாகவும் தொடர்ந்து மோடிதலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புக்கள் ☞2

# அரசியல் செயற்பாடுகளுக்கு பாடசாலைகளில் இனி தடை

### அமைச்சரவைத் தீர்மானம் என்கிறார் அமைச்சர் பந்துல

பாடசாலைகளில் அரசியல் செயற்பாடுகளில்ஈடுபடமுடியாது என்று சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டு விட்டது என்றுஅமைச்சரவைபேச்சாளர் அமைச்சர்பந்துலகுணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங் களைஅறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர்இதனைத்தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:

பாடசாலைகளில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட முடியாது என்று சில வாரங்களுக்கு முன்னர் ☞2

## பொருளாதார மீட்சிக்காக புதிய நிறுவன கட்டமைப்பு

### உருவாக்கப்படும் என்கிறார் ஜனாதிபதி

நாட்டின் பொருளாதார மீட்சித் திட்டத்தை இலகுபடுத்தும் வகையில் புதிய நிறுவனக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்தத்திட்டமிட்டுள்ளதாகஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்புதாஜ்சமுத்ராஹோட்டலில் நேற்று ஆரம்பமான டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் மாநாட்டில் பிரதான உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதார மாற்றத் திட்டத்தை இலகுபடுத்தும் வகையில் புதிய நிறுவன கட்டமைப்பொன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். தகவல் தொழில்நுட்பசபைபோன்றதற்போதுள்ள கட்டமைப்புகளில்இருந்துவிலகி, டிஜிட்டல் மாற்றத்திற்கான முகவர் நிலையம் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான மையத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக 2024 வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ஒரு பில்லியன்ரூபாவைஒதுக்கநடவடிக்கை எடுத்துள்ளோம்.

விவசாயத்தை நவீனமய ☞8

## வங்கி வட்டி வீதங்கள் இன்னும் குறையும்

கொள்கை வட்டி வீதங்கள் குறைக் கப்பட்டதன் மூலம் வங்கிவட்டிவீதங்களும் குறைவடையும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

வங்கிகளுடனான பரிவர்த்தனைகளின் போது, மத்திய வங்கி அறவிடும்வட்டிவீதங்கள் அல்லதுகொள்கைவட்டி வீதங்களை 50 ☞2

## குறைந்தபட்ச வேதனச் சட்டத்தை திருத்த அமைச்சரவை அங்கீகாரம்

தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய குறைந்தபட்ச வேதனம் 12,500 ரூபாவாக விதிக்கப் பட்டுள்ளது. தேசிய தொழிலாளர் ஆலோசனைசபையின்விதந்துரைகளின் பிரகாரம் நியமிக்கபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைப் பிரதிநித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் தருநர் களையும் உட்சேர்த்து முத்தரப்பு உபகுழுவொன்றின் மூலம் குறித்த வேதனத்தை 17,500 ரூபா வரை அதிகரிப்பதற்கு விதந்துரைக்கப் பட்டுள்ளது. ☞2

## வெற்றிகரமான கல்வி இல்லா நாட்டில் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது

### சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

வெற்றிகரமான கல்வி முறை இல்லாத நாட்டில் அபிவிருத்தியை எதிர்பார்க்கமுடியாது என ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மாத்தறை கொட பொல இலுக்பிடிய கனிஷ்ட பாடசாலை மாணவர்களுக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடத்தை மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டபோது, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இரண்டுமாடிகளைக் கொண்ட இந்தக் ☞2

## சர்வதேச விதிகளை மதிக்காத நாடு பெரும் அழிவைச் சந்திக்க நேரிடும்

### எச்சரிக்கிறார் அமைச்சர் பந்துல

சர்வதேசவிதிகளை மதிக்காது தன்னிச்சையான முடிவுகளை எடுக்கும் நாடு, பெரும் அழிவை சந்திக்க நேரிடும். ஒரு நாடு சர்வதேசநாணயநிதியத் துடனான நிரந்தர கடன் உடன்படிக்கையை மாற்றுவதற்கோஅல்லது திருத்துவதற்கோ முற் பட்டால், அந்நாடு முன்வைக்கும் கடன் கடிதத்தை சர்வதேச நாடுகள ஏற்க மறுக்கும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணயநிதியத்துடனான நிரந்தர கடன் உடன் படிக்கையை மாற்றுவதாகவோ அல்லது திருத்துவதாகவோ எவரேனும் கூறினால், அவரால்; இரண்டு வாரங்கள் கூட இலங்கையில் ஒரு ஆளும் தரப்பை அமைக்க முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார், ஆட்சிக்கு வரவுள்ள தலைவர்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளை மாற்றுவோம் என்று கூறுகின்றனர்;அதற்கான சாத்தியக்கூறுகள் ☞8

## பரீட்சை சுமையைக் குறைத்த பாடசாலைக் கல்வி மேம்பாடு

### ஆளும் தரப்புக் கவனம்

பரீட்சை சுமையை குறைத்து பாடசாலை கல்வியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் ஆளும் தரப்பபு கவனம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞8

## மானிய ஆணைக்குழுவிற்குப் பதிலாக உயர் கல்வி அபிவிருத்தி ஆணைக்குழு

### இந்த வருடத்திற்குள் அமைக்கப்படும் சாத்தியம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக தேசிய உயர் கல்வி அபிவிருத்தி ஆணைக்குழு அமைக்கப்பட உள்ளது. இந்த வருடத்திற்குள் அது அமைக்கப்படும் சாத்தியம்உள்ளது. அதுதொடர்பானஅவதானிப்புக்களை வழங்குவதற்கென ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அதிகரித்துள்ளன.

இந்தியா தற்போது தனது பொருளாதார வளர்ச்சிப் பாதையில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகின்றது. அது வெற்றிகரமாகச் சாத்தியமாகியும் உள்ளது. அதனாலேயே இந்தியாவுடன் இலங்கையையும் இணைத்து பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தலாம் என்று ரணில் விக்கிரமசிங்கவும் எண்ணுகின்றார். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலம் கட்டுவதற்கு அவர் முனைவதும்கூட அதனடிப்படையில்தான்.

ரணிலின் அந்த எண்ணத்தை வைத்து பொருளாதார வளர்ச்சி என்கிற பெயரில் இலங்கையைக் கையகப்படுத்துவதில் இந்தியாவும்கூட அதிக நாட்டத்தைக் காட்டி வருகிறது. துரிதமான பொருளாதார வளர்ச்சி இரு நாடுகளிலும் உள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்கிற எதிர்பார்ப்பு இரு பக்கங்களிலும் ஆளும் தரப்புக்களுக்கு உள்ளது. அதனால் இலங்கையிலும் பொருளாதார வளர்ச்சியைத் சாதகமாக்கி, அதனை தனது பொருளாதார ரீதியாகத் தனது பிடிக்குள் வைத்திருப்பதன் மூலம் (அமெரிக்கா - கனடா பொ-ருளாதார உறவுகள் போன்று) பிராந்தியத்தில் தனது பாதுகாப்பையும் உறுதிப்பாட்டையும் பாதுகாத்துக்கொள்வது புதுடில்லியின் ராஜதந்திரமாக உள்ளது.

இந்தியாவில் மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் இந்தப் போக்கு மேலும் ஆணித்தரமாகவும் வீச்சாகவும் முன்னெடுக்கப்படும். அத்தகையதொரு நிலையில் இந்தியாவோடு இணைந்து போகக்கூடிய ஒருவரே இலங்கையில் ஆட்சி அதிகாரத்திலிருப்பதை புதுடில்லி விரும்பும். இப்போதுள்ள 3 ஜனாதிபதி வேட்பாளர்களில் ரணில் விக்கிரமசிங்கவே அதற்கான சாத்தியமான தெரிவாக இருப்பார். அவரால்தான் இலங்கையை இந்தியாவுடன் இணைக்க முடியும் என்பதுடன் பொருளாதார வளர்ச்சியையும் சாத்தியமாக்க முடியும் என்ற கருத்து நிலவுவதால் அடுத்து வரும் மாதங்கள் இலங்கைக்கும் மிக முக்கியமானவையாகவே அமையப்போகின்றன என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு எவரொ ருவருக்கும் நன்கொடைகளை வழங்க முடியும். எவ்வாறிருப்பினும் அதனை அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்ய முடியாது.

அதேபோன்று அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளில் கூட்டங்கள் நடத்தப்படுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு இடமளிக்கப்படக் கூடாது என்ற தீர்மானித்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

அவ்வாறிருக்கையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, நான் அபிவிருத்திக் குழு தலைவராகவுள்ள ஹோமாகம தொகுதியிலுள்ள பாடசாலையொன்றுக்கு விஜயம் மேற்கொண்டு ஒரு மில்லியன் பெறுமதியான நவீன வகுப்பறையை வழங்கி, கூட்டமொன்றை நடத்தியுள்ளதாக அறியக்கிடைத்தது. அது எமது தேர்தல் தொகுதிக்கு ஏற்படுத்தப்பட்ட வெட்கச் செயல் என்று நான் கருதுகின்றேன் என்றும் அமைச்சர் பந்துல தெரிவித்தார்.

## வங்கி வட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை புள்ளிகளால் அல்லது 5 சதவீதத்தால் குறைப்பதற்கு நேற்று கூடிய மத்திய வங்கியின் நாணயச்சபை தீர்மானித்தது.

இந்த தீர்மானத்தின் பின்னணியில் உள்ள விடயங்களை விளக்குவதற்கான செய்தியாளர்கள் சந்திப்பொன்றை மத்திய வங்கி நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த தேவை தொடர்ந்தும் குறைந்த மட்டத்தில் இருப்பதாலும் பணவீக்கம் எதிர்பார்த்த மட்டத்தில் உள்ளதாலும் வெளிநாட்டுத்துறையின் தாக்கம் குறைவடைந்ததாலும் கொள்கை வட்டி வீதங்களைக் குறைக்கத் தீர்மானித்ததாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதன்போது குறிப்பிட்டார்.

## மானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்ட நீதியரசர் ஷ்ரீபவன் குழுவின் அறிக்கை கிடைத்துள்ளது என்று உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2021--2022 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, உயர்தரத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் 17 பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஆனால் அந்த வருடங்களில் திட்டமிட்டபடி மாணவரை இணைக்கும் பணி நடக்கவில்லை என தகவல்கள் வெளியாகி வருகின்றன. அந்த தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை உறுதிப்படுத்த உரிய ஆவணங்கள் என்னிடம் உள்ளன.

கடந்த காலத்தில் ஏற்பட்ட சில சிக்கல்களினால் சில பல்கலைகழகங்களின் இறுதியாண்டு மாணவர்கள் சரியான நேரத்தில் படிப்பை முடிக்க முடியாமல் இன்னும் பல்கலைகழகங்களில் தங்கி உள்ளனர். விரிவுரைகள் மற்றும் நடைமுறைக் கற்கைகளை நடத்துவதற்குத் தேவையான வகுப்பறை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன.

இந்தச் சிக்கல்களை தீர்க்க சில மாற்று வழிகளை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம். இரத்மலானை பிரதேசத்தில் இருந்து மகாவலிக்கு சொந்தமான கட்டடமும், களனி பிரதேசத்தில் இருந்து அரசுக்குச் சொந்தமான பல கட்டடங்களும் எமக்குக் கிடைத்துள்ளன. குறித்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்டவுடன் இந்தப் பிரச்சினைகள் தீரும் என நம்புகிறோம்.

இங்கு விசேடமாக குறிப்பிட வேண்டிய ஒன்று உள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குப் பதிலாக தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவும் அமைக்கப்பட உள்ளது. இதுதொடர்பில், முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஶ்ரீபவன் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அவதானிப்புகள் அடங்கிய அறிக்கை நேற்று அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையை ஆய்வு செய்த பிறகு, இந்த ஆண்டுக்குள் தேசிய உயர்கல்வி அபிவிருத்தி ஆணைக்குழுவை அமைப்பது சாத்தியப்படும் என்று நம்புகிறேன். இது இந்நாட்டின் பல்கலைக்கழக முறைமை மாற்றத்திற்கு இன்றியமையாத நிறுவனம் இது என்பதைக் கூற வேண்டும் - என்றார்.

## கல்லீரல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சிக்கலான கல்லீரல் நோய்களுக்கான சிகிச்சைக்கு விசேட அறிவு மற்றும் விலையுயர்ந்த உபகரணங்கள் அவசியம்.

கல்லீரல் மாற்று சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்வது ஒரு நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பின் வளர்ச்சியின் குறிகாட்டியாகும். பட்டப்பின்படிப்பு பயிற்சி மையமாகவும் வடகொழும்பு கல்லீரல் நோய்களுக்கான மையம் செயற்படுவதோடு கல்லீரல் நோய்களில் உயர்தர ஆராய்ச்சியை நடத்தி இலங்கையில் கல்லீரல் புற்றுநோய் சிகிச்சையின் மிகப்பெரிய தரவுத்தளத்தை பேணுகிறது.

இந்த கல்லீரல் நோய் விசேட சிகிச்சை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக எம். எச். ஓமார் நிதியம் இரண்டரை பில்லியன் ரூபாய்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இது இலங்கையின் சுகாதாரம் மற்றும் கல்வி சேவைகளுக்கு இலங்கையில் தொழில் முனைவோர் வழங்கிய மிகப்பெரிய நன்கொடையாகும் .எம். எச். ஓமார் இந்த நாட்டில் புகழ்பெற்ற பிராண்டிக்ஸ் குழுமத்தின் ஸ்தாபகர் ஆவார்.

பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து எம். எச். ஓமார் விசேட கல்லீரல் நோய் சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதன் வசதிகளை அவதானிக்கவும் இணைந்து கொண்டார்.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட அதிதிகளின் நினைவுப் புத்தகத்தில் குறிப்பு ஒன்றையும் இட்டார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

ஓமார் குடும்பத்தினர் வழங்கிய தனித்துவமான நன்கொடை மற்றும் பிராண்டிக்ஸ் வர்த்தகத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆற்றிய பங்களிப்பை பாராட்டினார். கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சைகளுக்கு பிராந்தியத்தில் சிறந்த நாடாக இன்று இலங்கை மாறியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அந்த குழு நாட்டிற்கு வழங்கிய நற்பெயருக்கு நன்றி தெரிவித்தார்.

அத்துடன், இந்நாட்டில் சுகாதாரத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் குறித்தும் ஜனாதிபதி இங்கு கருத்துத் தெரிவித்தார். சிசு இறப்பு மற்றும் தாய் இறப்பு விகிதங்களின் அடிப்படையில் நமது நாடு புள்ளிவிபர அடிப்படையில் சிறந்த நிலையில் உள்ளது என்றும், கொவிட் தொற்றுநோய் காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்த பொருளாதார நெருக்கடி காலத்திலும் இலங்கை வலுவாக முன்னேற முடிந்ததாக இந்நிகழ்வில் உரையாற்றிய சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் இந்த வசதிகளுக்காக 2.5 பில்லியன் ரூபா பெரும்தொகையை நன்கொடையாக வழங்கிய எம்.எச்.ஓமார் மற்றும் குடும்பத்தினருக்கு அவர் நன்றிகளை தெரிவித்தார்.

## குறைந்தபட்ச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைய, குறைந்தபட்ச வேதனத்தை 12,500 ரூபாவிலிருந்து 17,500 ரூபா வரை 5,000 ரூபாவால் அதிகரிப்பதற்கும் மற்றும் குறைந்தபட்ச தேசிய நாளாந்த வேதனத்தை 500 ரூபாவிலிருந்து 700 ரூபா வரை 200 ரூபாவால் அதிகரிப்பதற்கும் இயலுமாகும் வகையில் 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## வெற்றிகரமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ஆறு மாத காலமே சென்றது. இப்பாடசாலையின் பௌதீகவளங்கள் மட்டுமன்றி மாணவர்களின் கல்வியிலும் தற்போது முன்னேற்றம் காணப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளில் அதிபரின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது. இக்கட்டடத்தை நிர்மாணிப்பதில் இராணுவம் பாரிய பங்களிப்பு வழங்கியது.

வெற்றிகரமான கல்வி முறை இல்லாத நாடு வெற்றி பெறாது. கல்வித் திட்டங்களை யார் வேண்டுமானாலும் உருவாக்கலாம். ஆனால் அந்தத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு மனித வளத்தை நிர்வகிக்க வேண்டும். கடந்த காலங்களில், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கு வரிசைகள் ஏற்பட்டன. அந்த நிலையில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ரணில் விக்ரமசிங்க, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி இந்நாட்டின் பொருளாதார நிலைமையை குறிப்பிடத்தக்க நிலைக்குக் கொண்டு வர பாடுபட்டார்.

அதற்கு அப்பால் இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு புதிய வேலைத் திட்டம் அவசியம். அதற்காக ஜனாதிபதி தற்போது பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றார். இலங்கை மத்திய வங்கி சுயாதீனமான நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. மத்திய வங்கி விவகாரங்களில் இனி அரசியல்வாதிகள் தலையிட முடியாது என்பதே இதன் பொருள். மத்திய வங்கி நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். மேலும், ஒவ்வொரு நிறுவனமும் நாட்டுக்கும் மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும். அதற்குத் தேவையான சட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு செயற்படாத நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

அத்துடன், நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான பொருளாதார வேலைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமான முறைகளின் மூலம் அந்தப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் தெனியாயவுக்கும் விசேட இடம் உண்டு. சுற்றுலாத் துறையிலும் தேயிலைத் தோட்டத் தொழிலிலும் தெனியாயவுக்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகிறது. அதற்கேற்ப இப்பகுதி மக்களுக்கும் செலவுக்கு ஏற்ற வருமானம் பெறும் பின்னணியை தயார் செய்து வருகிறோம்' என்றார்.

## சீன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹைனானில் உள்ள போவாவில் நடைபெறும் சீனாவின் முதன்மையான இந்த வருடாந்த சர்வதேச மாநாட்டில் பிரதமர் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். போவா மாநாட்டின் கருப்பொருள், 'ஆசியாவும் உலகமும்: பொதுவான சவால்கள், பகிரப்பட்ட பொறுப்புகள்' என்பதாகும். இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மற்றும் உயர்மட்ட வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

பீஜிங்கில், பிரதமர் தினேஷ் குணவர்தன முதலில் பிரதமர் லீ கியாங் மற்றும் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அடுத்து 3வது உயர் நிலை அதிகாரியான சீன கம்யூனிச கட்சியின் தேசிய மக்கள் காங்கிரஸின் தலைவர், ஜாவோ லீஜி ஆகியோரை சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விரிவாக கலந்துரையாடவுள்ளார்.

அவர் சீன துறைமுக தலைமையகம், ஓஹவாவீ, சோங்குவான்கன் சூழல் பாதுகாப்பு பூங்கா, பெய்ஜிங்கில் உள்ள தேசிய செயற்கைக்கோள் வானிலை மையம் மற்றும் ஹைனானில் உள்ள வெப்பமண்டல விஞ்ஞான அகாடமி ஆகியவற்றிற்கும் விஜயம் செய்யவுள்ளார். ஷாங்காயில், ஷாங்காய் அதிகாரிகளுடனான சந்திப்புகளுக்கு மேலதிகமாக, அலிபே, சிட்ரிப், டில்மா டீ மற்றும் யுனிவர்சல் எனர்ஜி ஆகிய நிறுவனங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

பிரதமருடன் இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, சீனத் தூதுவர் கியூ சென்ஹோங், பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளும் இணைந்துகொண்டுள்ளனர்.



# தொல்பொருள்துறை அமைச்சர் விதுர வெருக்கலம்பதி ஆலயத்திற்கு வருகை





திருகோணமலை மாவட்டம் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குப்பட்ட கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க வெருகலம்பதி ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு தொல்பொருள் பௌத்தசாசன மற்றும் கலாசார அமைச்சரான விதுர விக்ரமநாயக விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவான் அத்துகொரல , வெருகல் பிரதேச செயலாளர் எம். ஏ.அனஸ் , திருகோணமலை மாவட்ட செயலாளர் சாமிந்த ஹெட்டியாரச்சி , மேலதிக மாவட்ட செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ் , பௌத்த மத குருமார்கள், ஆலய நிருவாக சபையினர் உட்பட பலரும் பங்குபற்றியிருந்தனர்.

இவ் விஜயத்தின் பொழுது கடந்த காலத்தில ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் ஆலயத்தை அண்மித்துள்ள வெருகல் ஆற்று கரைப்பகுதி சேதமடைந்தமை தொடர்பாகவும் பொருத்தமான வகையில் அணைக்கட்டு அமைத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (05)

# தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு சிறு விலங்குகளை கடத்திய தம்பதி

## கட்டுநாயக்காவில் கைது











தாய்லாந்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 88 விலங்குகளுடன் இளம் வர்த்தக தம்பதி ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுங்கத் திணைக்கள அதிகாரிகள் குறித்த தம்பதியர்களை சோதனையிட்ட போது 40 லட்சம் ரூபா பெறுமதியான 88 விலங்குகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிறிய பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்ட நிலையில் தவளை, மீன், குளவி, அணில், ஆமை, பல்லி, வௌவால், ஒரு வகைப் புழு, எலி போன்றவை இவர்களால் கொண்டுவரப்பட்டன எனச் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். கைதான தம்பதியர் அவிசாவளை, புவகபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளதுடன் இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுங்க திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (05)

# பளை - இத்தாவில் பகுதியில் மாட்டுடன் மோதியது ரயில்

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மாட்டுடன் மோதி ரயில் விபத்துக்குள்ளானது.

மேற்படி விபத்து காரணமாக ரயில் சேவையில் சில மணி நேரம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (05)



# சொகுசு பஸ் மோதியதில் மீசாலையில் ஒருவர் சாவு







யாழ்ப்பாணம் - கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி விவேகானந்தா நகரை சேர்ந்த சின்னராசா சுதன்ராஜா (வயது 41) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சொகுசு பஸ், யாழ் - கண்டி நெடுஞ்சாலையில், மீசாலை வீரசிங்கம் கல்லூரி முன்பாக பாதசாரி கடவையில் பிரிதொரு வாகனத்தை முந்தி செல்ல முற்பட்ட வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதி விபத்தை ஏற்படுத்தியது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டி சம்பவ இடத்திலையே உயிரிழந்த நிலையில், பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும், விபத்து நடைபெற்ற இடத்தில் பஸ்ஸைக் கைவிட்டு, அங்கிருந்து தப்பி சென்று, கொடிகாம பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

சரண்டைந்த இருவரையும், கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளும் தரப்பு மனச்சாட்சியோடு நடந்துகொள்ளவேண்டும்

**தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் முன்வைத்த யோசனைகளுக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

**2016 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய குறைந்தபட்ச வேதனம் 12,500 ரூபாயாக இருந்து வருகின்றது. தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையின் விதந்துரைகளின் பிரகாரம் நியமிக்கபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் மற்றும் தொழில் தருநர்களையும் உட்சேர்த்து முத்தரப்பு உபகுழுவொன்றின் மூலம் குறித்த வேதனத்தை 17,500 ரூபா வரை அதிகரிப்பதற்கு விதந்துரைக்கப்பட்டுள்ளது.**

**அதற்கமைய, குறைந்தபட்ச வேதனத்தை 12,500 ரூபாவிலிருந்து 17,500 ரூபா வரை 5,000 ரூபாவால் அதிகரிப்பதற்கும் மற்றும் குறைந்தபட்ச தேசிய நாளாந்த வேதனத்தை 500 ரூபாவிலிருந்து 700ரூபா வரை 200ரூபாவால் அதிகரிப்பதற்கும் இயலுமாகும் வகையில் 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஊழியர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

**இது முற்றிலும் அநியாயமானது. ஒரு நபரின் ஆகக் குறைந்த வேதனம் 17,500 என்பது அவர் இந்த நாட்டில் வாழ்வதற்கு எந்த வகையிலும் போதுமானது அல்ல. இலங்கையில் கொழும்பு போன்ற பெரு நகரங்களில் வசிப்பதற்கு ஆகக் குறைந்தது, வீட்டு வாடகை இன்றி 50 ஆயிரம் ரூபாய் தேவை என்று மதிப்பீடுகள் காட்டுகின்றன. கொழும்பு தவிர்ந்த நகரங்களில் இந்தத் தொகை சற்றுக் குறைவாக இருக்கலாம். ஆனால், எந்த நகரத்திலும் அல்லது கிராமத்திலும் ஒரு நபர் 17,500 ரூபாய் மாத வருமானத்தில் வாழ முடியாது.**

**அரச நிறுவனங்களில் ஒரு சிற்றூழியருக்கு ஆகக் குறைந்த சம்பளம் 40 ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கும் நிலையில், தனியார் –துறையில் இந்த ஆகக் குறைந்தபட்ச சம்பளத்தை அறிவித்திருப்பது ஆளும் தரப்பின் மனிதாபிமானமற்ற செயல். உண்மையில், நடைமுறை வாழ்க்கையில் தனியார் நிறுவனங்களில் இந்த ஆகக் குறைந்த அரச வேதனத் தொகையை யாரும் வழங்குவதில்லை. அந்தத் தொகைக்கு யாரும் வேலைக்கு வரமாட்டார்கள் என்ற காரணத்தால் அப்படிப்பட்ட சம்பளம் யாருக்கும் வழங்கப்படவுதில்லை.**

**யதார்த்தம் அப்படியிருக்கும்போது அரசு ஆகக்குறைந்த வேதனம் என்று மிகச் சொற்பத் தொகையை நிர்ணயம் செய்திருப்பது பெரும் ஏமாற்று மற்றும் தகாத செயல். அது உடனடியாக மாற்றப்படவேண்டும். குறைந்தபட்ச வேதனம் என்பதுஒருமனிதன்மதிப்போடுவாழுவதற்குஏற்றஅடிப்படைக் கொடுப்பனவாக அமையப்பெறவேண்டும். அதற்கேற்ற வகையில் இந்த ஆகக் குறைந்த வேதனத் தொகை குறைந்தபட்சம் இரண்டு மடங்காக அதிகரிக்கப்படவேண்டும். ஆளும் தரப்பு இது விடயத்தில் உடனடியாகத் தனது முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும்.**

**நடைமுறையில் நாளாந்தக் கூலி வேலைக்குக்கூட ஆகக் குறைந்தது ரூபாய் 2,500 வழங்கப்படுகின்றது. மாதாந்தம் சராசரியாக 15 நாட்கள் வேலை செய்தால்கூட ஒருவர் –குறைந்தது 35 ஆயிரம் ––ரூபாய்களுக்கும் அதிகமாக வருமானம் பெறுகிறார். அப்படியிருக்க மாதம் முழுவதும் பணியாற்றும் ஒருவருக்கு 17,500 ரூபாய் வேதனம் என்பது ஏமாற்று வேலை. டிஜிட்டல் பொருளாதாரம், ஏற்றுமதிப் பொருளாதாரம் என்றெல்லாம் பேசும் ஆளும் தரப்பு இப்படி ஒரு மனிதன் உயிர்வாழக்கூடப் போதாத ஆகக் குறைந்த சம்பளத்தைஅறிவித்திருப்பதுஒருபோதும்ஏற்றுக்கொள்ளவே முடியாத செயல். அதனால் ஆளும் தரப்பு உடனடியாகத் தனது முடிவை மறுபரிசீலனை செய்து, ஆகக் குறைந்த வேதனத் தொகையை இரட்டிப்பாக்க வேண்டும்.**



# கிராமங்களின் ஆதரவை சஜித்தால் திரட்டமுடியுமா?

**உபுல் யோசப் பெர்னான்டோ**

கிராமங்களின் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரட்டியவர் பிரேமதாஸ. அதேபோன்று கிராம மக்களின் ஆதரவை சிறீ லங்கா சுதந்திரக் கட்சிக்குத் திரட்டித் தந்தவர் மகிந்த ராஜபக்ச.

பிரேமதாசா கிராமிய அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை திட்டமிட்டார், கிராமப்புற சமூகங்களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் (ருூீ) இணைத்து, அவரது அரசியல் எதிராளிகளை ஏமாற்றினார். 'ராஜலிய' நாளிதழில் பிரசுரிக்கப்பட்ட ஒரு அழுத்தமான கார்ட்டூனில் தெளிவாக சித்தரிக்கப்பட்ட இந்த மூலோபாய சூழ்ச்சி, இலங்கை அரசியல் இயக்கவியலில் ஒரு திருப்புமுனையை அடையாளப்படுத்தியது.

பிரேமதாஸவிற்கு எதிராக லலித், காமினி மற்றும் பிரேமச்சந்திர ஆகியோர் அப்போது கட்சிக்குள்ளேயே போர்க்கொடி தூக்கி நின்றனர். என்றாலும் அவர்களால் பிரேமதாஸவை வெல்ல முடியவில்லை, இந்த நிலையையே 'ராஜலிய' கார்ட்டூன் பிரதிபலித்தது. அதில் பிரேமதாஸ பாம்புகளால் சூழப்பட்டவராக இருந்தார். அவரது கட்சிக்குள்ளும் ஆளும் தரப்புக்குள்ளும் இருந்தபடியே அவரை எதிர்ப்பவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அந்தப் பாம்புகள் இருந்தன. இந்த அரசியல் போராட்டத்தில் லலித், காமினி மற்றும் பிரேமச்சந்திர ஆகியோர் பிரேமதாசாவை இழிவுபடுத்துவதற்கும் அவரது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டனர். அதே நேரத்தில், சமாந்தரமாக சுதந்திரக் கட்சியும் அவரை இழிவுபடுத்தும் பரப்புரையை முன்னெடுத்தது.

இத்தகைய அரசியல் குழப்பங்கள் மற்றும் சர்ச்சைகளுக்கு மத்தியில், பிரேமதாசாவின் சோகமான மறைவு இலங்கை அரசியலில் ஒரு முக்கிய தருணத்தைக் குறித்தது. பிரேமதாஸவின் கொலையை அடுத்து ரொஸ்மிட் பிளேஸில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி (ளுடுகூ) உறுப்பினர்களால் கொண்டாடப்பட்ட ஷாம்பெயின் விருந்தும் கிராமப்புற கிராமங்களில் வெடித்த பட்டாசுகளும் அன்றைய அரசியல்பரப்பில் உள்ள ஆழமான பிளவுகளை அடிக்கோடிட்டுக் காட்டி நின்றன.

பிரேமதாஸவின் படுகொலையின் பின்விளைவுகள் 1993 மாகாண சபைத் தேர்தலில் எதிர்பாராத முடிவுகளைத் தந்தன. ஐ.தே.க. மற்றும் சு.கட்சி பரப்புரைகளால் பிரேமதாசவுக்கு எதிரான உணர்வு தேசம் முழுவதும் பரவும் என்ற எதிர்பார்ப்பு இருந்தபோதிலும், ஐ.தே.க. கிராமப்புறங்களில் வெற்றிகளைப் பெற்றது, சு.க மற்றும் ஏனைய கட்சிகளை அவநம்பிக்கையில் ஆழ்த்தியது. இந்தத் தேர்தல் வெற்றியானது, முன்னர் சுதந்திரக் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்த கிராமப் பிரதேசங்களில் ஐ.தே.கவின் எழுச்சியை எடுத்துக்காட்டியது.

1977 க்கு முன்னர், கிராமங்கள் பண்டார நாயக்க தலைமையிலான சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தன. ஆனால், அந்த ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் திருப்புவதற்கான முயற்சிகளை ஜே.ஆர்.ஜயவர்த்தன தொடங்கினார். பிரேமதாஸவின் காலத்தில் இது உச்சம் பெற்றது.



அவரது வெற்றிகரமான முயற்சிகளான 'கம் உடவ' கிராமப்புறத் திட்டம் மற்றும் கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றினால் கிடைத்த பயன் அது.

பிரேமதாசவின் மறைவுக்குப் பின்னர், பின்னர் வந்த தலைவர்கள் ஐ,தெ.கவின் கிராமிய ஆதரவுத் தளத்தைப் பராமரிக்கத் தவறினர். கிராமங்களில் மீண்டும் சுதந்திரக் கட்சியின் இருப்பை வலுப்படுத்த விரும்பிய சந்திரிகா குமாரணதுங்க, மஹிந்த ராஜபக்சவையும் ஏனைய கிராமத் தலைவர்களையும் பயன்படுத்தினார். ஐ.தே.கவை அதன் நகர்ப்புறக் கோட்டைக ளுக்குத் தள்ளினார்.

கிராமங்களில் ஐ.தே.க. பெற்றிருந்த ஆதரவுத் தளத்தை மகிந்த ராஜபக்ச ஒரு வலிமைமிக்க அரசியல் சக்தியாக வெளிப்பட்டதன் மூலம் மீண்டும் திரட்டுவதில் மகிந்த வெற்றி பெற்றார். கிராம அரசியலில் அவரது திறமையைக் குறிக்கும் வகையில் "கேம் பையா" என்ற பெயரையும் பெற்றார். அதனை மாற்றியமைத்து கிராமங்களின் ஆதரவைத் தன் பக்கம் திருப்பிக்கொள்ள சஜித் பிரேமதாச கடுமையாக முயற்சித்தார். .

பிணைமுறி ஊழல் மற்றும் ஈஸ்டர் தாக்குதல் போன்ற சர்ச்சைகளால் ஐ.தே.க. எதிர்கொண்ட சவால்களுக்கு மத்தியிலும், சஜித் பிரேமதாச போன்ற தலைவர்கள், கிராமப்புற தொகுதிகளில் தாம் இழந்த இடத்தை மீண்டும் பெற முயன்றனர். 2019 ஜனாதிபதித் தேர்தலின் தேர்தல் முடிவு புள்ளிவிவரங்கள் கிராமப்புற வாக்காளர்களின் நீடித்த செல்வாக்கை அடிக்கோடிட்டுக் காட்டின, இந்த பகுதிகளில் மகிந்த கொண்டிருந்த தொடர்ச்சியான ஆதிக்கத்தை அவை பிரதிபலித்தன.

பின்வரும் அட்டவணை அதை தெளிவாகக் காட்டுகிறது கோட்டாபயவின் உரக் கொள்கை

(5ஆம் பக்கம் பார்க்க..)

# 13ஆவது திருத்தச் சட்டத்தினை ஏற்பதில் ஒற்றுமையாக செயற்படுவது அவசியம்

## சித்தார்த்தன் எம்.பி. தகவல்

13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்வதில் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என புளொட் அமைப்பின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்திய இலங்கை ஒப்பந்தம் மூலம் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் இருக்கின்றது. அது போதும் எனக் கூறவில்லை. ஆனால் அதை ஏற்றுக்கொள்வதில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். எங்களுக்குள் பலர் அதை மறுக்கின்ற தன்மை இருந்தாலும் கூட இந்த 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு தொடர்ந்து வருகின்ற அரசுகள் எல்லாம் எவ்வளவு பின்னடிக்கின்றன என்பதை கண்கூடாக காண்கின்றோம்.

இந்த நிலையில் இதை விட நாம் பெரிதாக பெறுவோம் என்று சொல்லி படிப்படியாக எங்களுடைய இனம் அதாவது வடக்கு - கிழக்கு தமிழர்கள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டு வருகிறார்கள். இன்றும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வசதியாக கனடா விசா, லண்டன் விசா கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வருடத்தில் வடக்கு - கிழக்கில் இருந்து ஏறக்குறைய சுமார் 20 ஆயிரம் பேர் நாட்டை விட்டு சென்றுள்ளார்கள்.

ஆகவே, கையில் இருப்பதையாவது இறுக்கமாக பற்றி வடக்கு - கிழக்கை கட்டியெழுப்பும் முயற்சி எடுக்க வேண்டும். இது ஒரு ஜதார்த்தமான முடிவு. சரியான முடிவு எனச் சொல்லவில்லை. சரியான முடிவை நோக்கி செல்ல வேண்டும். அதன்போது இருப்பதை இறுகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பது தான் உண்மையான நிலைப்பாடு.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் 5 கட்சிகள் ஒற்றுமையாக ஜனநாயக தமிழ் தேசியகக் கூட்டனி என்ற பெயரில் இயங்கி வருகின்றோம். ஒவ்வொரு காலத்திலும் தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு காரணங்களுக்காக அந்த ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. அதில 90 வீதம் தேர்தலுக்காகத் தான். ஆனால் நாங்கள் தேர்தலுக்காக ஒற்றுமைப்படவில்லை. தேர்தலுக்கு முன்னரே இது பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளை நோக்கி நகர்வதற்காக ஒற்றுமையாக அமைக்கப்பட்ட அமைப்பு இது. தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக் கூடிய கட்சிகள் அனைத்தும் இதில் இணையக் கூடிய வகையில் தான் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஏனைய கட்சிகளும் இதில் வந்து இணைவார்கள். அந்த ஒற்றுமையின் மூலமே நியாயமான தீர்வை பெற முடியும். அதற்கு தான் மக்கள ஆதரவு கிடைக்கும். அதனால் மக்களது அபிலாசைகளை அடைய முடியும் எனத் தெரிவித்தார். (05 - 100)

# கிராமங்களின்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கயால், மகிந்தவின் அயல் கிராமம் அவரது பிடியில் இருந்து ஏறக்குறைய நழுவியது. இந்தச் சவாலை எதிர்கொண்ட ராஜபக்சேக்கள், ரணிலை ஜனாதிபதியாக ஆதரித்து சிறிலங்கா பொது ஜன பெரமுனவைத் (ளுடுீ) தங்கள் கோட்டைகளிலிருந்து விலக்கினர். மகிந்தவின் செல்வாக்கு கிராமத்தில் குறைய, ஒரு காலத்தில் மகிந்தவின் அரசியல் சூழ்ச்சிகளால் புதைக்கப்பட்டிருந்த பிரேமதாசவின் மரபு மீண்டும் தலைதூக்க ஆரம்பித்தது மற்றும் சஜித்தின் எதிர்க்கட்சித் தலைமைக்கு ஏற்றம் ஊட்டப்பட்டது.

1977 இல், ரணசிங்க பிரேமதாச, பண்டாரநாயக்கவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினார். பண்டாரநாயக்கா அண்டை கிராமங்களை வெல்வதற்கும் தனது இமேஜை உயர்த்துவதற்கும் உழைத்தார். கிராமப்புறங்களுக்கு நேரடியாக அபிவிருத்தி முயற்சிகளைக் கொண்டுவந்தார், ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவினார், 'ஜனசவிய' திட்டத்தை ஆரம்பித்து, கிராமப்புற சமூகங்களின் நம்பிக்கையைப் பெற்றார்.

இதேவேளை, ஜே.ஆர்.ஜெயவர்தன நகர அபிவிருத்தியில் கவனம் செலுத்தி, சுதந்திர வர்த்தக வலயங்களை முதன்மையாக கொழும்பு மற்றும் கம்பஹாவில் உருவாக்கினார். பிரேமதாசவின் தொலைநோக்குப் பார்வை கொக்கல சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கிராமிய இணைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமான திட்டங்கள், அவரது அகால இறப்பால் துயரகரமாக நிறுத்தப்பட்டது.

பிரேமதாசவின் சமூகங்களையும் தேசத்தையும் ஒட்டுமொத்தமாக உயர்த்துவதற்கான முயற்சிகளை கிராமங்கள் அன்புடன் நினைவுகூருகின்றன. எவ்வாறாயினும், விஜேதுங்க மற்றும் ரணில் போன்ற பின்னர் வந்த ஐ.தே.க தலைவர்கள் பிரேமதாசாவின் திட்டங்களை கைவிட்டு அவரது பாரம்பரியத்தில் இருந்து விலகினர். இந்த வெற்றிடமானது கிராமப்புற அதிருப்தியை மகிந்தவை பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தது, குறிப்பாக 2004 இல் சந்திரிகாவின் பொருளாதாரக் கொள்கைகள் மீதான அதிருப்திக்கு மத்தியில் கிராம மக்கள் பிரேமதாசாவைப் போன்ற ஒரு தலைவரைத் தேடியபோது. மகிந்த, பசிலின் மூலோபாய வழிகாட்டுதலுடன், உள்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் கிராமிய பொருளாதார முயற்சிகள் மூலம் கிராமங்களை திறம்பட கவர்ந்தார்.

சந்திரிகா தனது பெற்றோரின் பொருளாதாரக் கொள்கைகளைவிட்டு ஐ.தே.கவின் கொள்கைகளை நோக்கி விலகியமை மற்றும் மகிந்தவை நோக்கிய கோத்தபாயவின் மோதல் அணுகுமுறை ஆகியவை பெரமுனவைக் கிராமப்புற ஆதரவிலிருந்து மேலும் அந்நியப்படுத்தியது. இதன் விளைவாக, கிராம மக்கள் மகிந்தவிடம் ஆறுதல் கண்டனர், அவரை பிரேமதாச பரம்பரையின் வாரிசாகக் கருதினர். அதேநேரம் கிராம அபிவிருத்திக்கான தனது தந்தையின் அர்ப்பணிப்பை எதிரொலிக்கும் சஜித் பிரேமதாசவிடமும் இன்றைய கிராமவாசிகள் ஒரு புதிய கலங்கரை விளக்கத்தைக் காண்கின்றனர்.

டிஜிட்டல் வகுப்பறைகளை வழங்குதல், சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கிராமப்புற சமூகங்களுடன் நேரடியாகத் தொடர்பாடுதல் போன்ற சஜித்தின் முன்முயற்சிகள் கிராமவாசிகளிடம் பிரேமதாசா மீதுள்ள நெருக்கத்தை மீண்டும் ஏற்படுத்துகின்றது. மகிந்தவின் பிடியில் இருந்து கிராமத்தை சஜித்தால் மீட்க முடியுமா? என்றால் அது நிச்சயமற்றதுதான். ஆனாலும் கிராமப்புற மக்களுடன் தொடர்புகொள்வதற்கும், அவர்களின் மொழியைப் பேசுவதற்கும், அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்வதற்கும் சஜித்திற்குள்ள திறன், கிராமப்புற ஆதரவிற்கான ஒரு வலிமைமிக்க போட்டியாளராக அவரை நிலைநிறுத்துகிறது. அவர் தொடர்ந்து கிராமத்துடன் ஆழமான தொடர்பாடலைக் கொண்டிருப்பாரானால் அவர்களின் இதயங்களையும் மனதையும் கைப்பற்றுவது கடக்க முடியாத பணியாக இருக்காது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மகப்பேற்று வைத்தியசாலை ஜனாதிபதியால் இன்று திறப்பு

## தெற்காசியாவிலேயே மிகப்பெரியது

தெற்காசியாவின் மிகப் பெரிய மகப்பேறு வைத்தியசாலையாக காலி கராப்பிட்டியவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் இன்று (புதன்கிழமை) திறந்து வைக்கப்படவுள்ளது. ஜேர்மன் இலங்கை நட்புறவுத் திட்டத்தின் கீழ் இந்தப் புதிய மகளிர் வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது.

ஆறு மாடிகளைக் கொண்ட இந்த மருத்துவமனையில் அறுநூறு படுக்கைகள், ஆறு அறுவை சிகிச்சை அரங்குகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள், ஆய்வகங்கள், சிசு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் சிறப்பு குழந்தைகள் பிரிவுகள் உள்ளிட்ட அனைத்து நவீன மருத்துவ வசதிகளும் உள்ளன என மருத்துவமனை பணிப்பாளர் பி.விமலசேன தெரிவித்துள்ளார்.

இதற்காக ஜேர்மன் அரசாங்கம் வழங்கிய கடன் உதவித் தொகை இருபத்தைந்து மில்லியன் யூரோக்கள்(ஷரூபா 357 கோழி) ஆரம்பத்தில் வைத்தியசாலை நிர்மாணத்திற்காக எண்ணூறு பேர்ச்ஸ் பெறப்பட்டுள்ளது.

பின்னர் மேலும் இரண்டு காணிகள் கிடைத்ததால் வைத்தியசாலையின் தற்போதைய அளவு ஆயிரம் பேர்ச்சஸை அண்மித்துள்ளது. மேலும் வைத்தியசாலை திறக்கப்பட்டதன் பின்னர் கராப்பிட்டிய புறநகர் அபிவிருத்தியை ஆரம்பிக்க நகர அபிவிருத்தி அதிகார சபை திட்டமிட்டுள்ளது.

ஜேர்மனியின் முன்னாள் அதிபர் ஹெல்முட் கோல் 2004 டிசெம்பரில் விடுமுறைக்காக இலங்கை வந்தபோது மிகப்பெரிய மகப்பேறு மருத்துவமனையான காலி மஹாமோதர வைத்தியசாலையின் சேதத்தைப் பார்த்து நன்கொடையாக வழங்கிய 300 கோடி ஷரூபாவில் இந்த வைத்தியசாலையின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதன்படி 2007 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரத்ணசிறி விக்கிரமநாயக்க இந்த புதிய வைத்தியசாலைக்கு அடிக்கல் நாட்டினார் ஆனால் அதனை நிர்மாணிக்கும் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனம் அதனை பாதியிலேயே நிறுத்திவிட்டு இலங்கையை விட்டு வெளியேறியது.

இதேவேளை, கடந்த அரசாங்கத்தின் தலையீட்டினால் வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக ஜேர்மனியிடம் இருந்து இருபத்தைந்து மில்லியன் யூரோக்களை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் 2015 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டன.

அத்தோடு புதிய மருத்துவமனை திறக்கப்பட்ட பிறகு மஹமோதர மகப்பேறு மருத்துவமனை அந்த இடத்திலிருந்து அகற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# கனடா அனுப்புவதாகப் பணமும் மோசடி யாழ்ப்பாணத்தில் சந்தேகநபர் கைது

யாப்பாணத்திலிருந்து கனடாவுக்கு அனுப்புவதாக கூறி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை அவர் கைது செய்யப்பட்டார்.

கனடாவில் தென்னிந்திய இசையமைப்பாளரின் மாபெரும் இசை நிகழ்வொன்று இடம்பெறவுள்ளதாகவும் அதற்காக இலங்கையில் இருந்து சில ஊடகவியலாளர்களை அழைத்து செல்ல உள்ளதாகவும் குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அழைத்து செல்லப்படவுள்ள ஊடகவியலாளர்களுடன் ஊடகவியலாளராக உங்களையும் அழைத்து சென்று கனடாவில் இறக்கி விடுவதாக யாழ்ப்பாண இளைஞன் ஒருவரிடம் கூறியுள்ளார்.

அதற்காக சிலருக்கு பணம் கொடுக்க வேண்டும் என்பதோடு ஊடக நிறுவனம் ஒன்றிடம் இருந்து ஊடகவியலாளர் என அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள, அந்நிறுவனத்திற்கு ஒரு தொகை பணம் வழங்க வேண்டும் என இளைஞனிடம் இருந்து 43 லட்ச ஷரூபா பணத்தினை பெற்று, இளைஞனுக்கு ஊடக நிறுவனம் ஒன்றின் அடையாள அட்டையையும் வழங்கியுள்ளார். (05)

# பாடசாலை அபிவிருத்தி சங்க கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தவர்களே வராத விநோதம்

## கற்பிட்டி அல் அக்ஸாவில் சம்பவம்

(சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா அதிபர் முஸ்தபா அன்சார் இனால் அழைப்பு விடுக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டத்திற்கு பெற்றோர்கள் பாடசாலையில் ஒன்று கூடினர் எனினும் பாடசாலையின் அதிபர் மற்றும் பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை பல மணிநேரம் காத்திருந்த பெற்றோர்கள் தமது ஆதங்கத்தையும் கவலையையும் தெரிவித்ததுடன் அதிபரின் இச் செயலை வண்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்தனர். பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டம் எவ்வித அறிவிப்பும் இன்றி கைவிடப்பட்டதை சுட்டிக் காட்டி கூட்டத்திற்கு சமுகம் அளித்த பெற்றோர்களால் அதிபரின் இச் செயற்பாட்டை சுட்டிக் காட்டி கற்பிட்டி கோட்ட கல்விப் பணிப்பாளர் , புத்தளம் வலயக் கல்வி பணிப்பாளர் மற்றும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் ஆகியோருக்கு நேரடியாக மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது . (05)

# சீனா ஒலிம்பியாட் 2024 போட்டி யாழ். இந்து மாணவன் தெரிவு

*சீனாவில் நடைபெறவுள்ள மெண்டெலீவ் இரசாயனவியல் ஒலிம்பியாட் 2024 போட்டியில் பங்குபற்றுவதற்கு அதிகூடிய புள்ளிகளை பெற்று செல்வன் சிறீசுந்தரராஜா சிறீகணா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.*

*இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,*

*இலங்கையைச் சேர்ந்த 4 மாணவர்களில், மாஸ்ட். சீனாவின் ஷென்சென் நகரில் மாஸ்கோ பல்கலைக்கழகம் நடத்தும் சர்வதேச மெண்டலீவ் வேதியியல் ஒலிம்பியாட் –2024 இல் பங்கேற்க வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் தரம் 13 சேர்ந்த மாணவன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*(05)*


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்




அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park



கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



# தென்மராட்சி பிரதேச செயலக சர்வதேச மகளிர் தின நிகழ்வு

சர்வதேச மகளிர்தின நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலகத்தால் நேற்று (செவ்வாய்க்கிழமை) பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொதுவைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி கமலா ஜெகூவும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் செயலக சட்ட அலுவலர் சட்டத்தரணி திருமதி சுகிர்தன் குகப்பிரியா, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன், உலக தரிசனம் நிறுவன யாழ்.முகாமையாளர் யூட் நிஷாந்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி கொமர்சல் வங்கி உதவி முகாமையாளர் திருமதி ஸ்ரீகாயத்திரி ஜெயசாந்தன், புதிய சுதந்திரன் பத்திரிகை நிர்வாக இயக்குநரும் தொழிலதிபருமாகிய கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் உரைகள், கலைநிகழ்வுகள் நடைபெற்றதுடன் பெண் முயற்சியாளர்கள் விருதுகள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.





# நாவிதன்வெளி அம்பாறை பிரதான வீதியில் பொலிஸாரின் விசேட தேடுதல் நடவடிக்கை

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் திங்கட்கிழமை நாவிதன்வெளியில் முன்னெடுக்கப்பட்டது.

சவளக்கடை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.எஸ்.கே.தசநாயக தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அம்பாறை-கல்முனை ஊடாக நாவிதன்வெளி வீதியில் கிட்டங்கி பாலத்திற்கருகில் இந்த விசேட தேடுதல் மற்றும் பரிசோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது போக்குவரத்தில் டுபட்ட வாகனங்கள் மற்றும் பொது மக்கள் எடுத்துச்சென்ற பொருள்கள் என்பன மோப்ப நாயின் உதவியுடன் சோதனை செய்யப்பட்டன.

சட்டரீதியற்ற போதைப்பொருள் பாவனை மற்றும் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோவில் வைத்தியசாலை அபிவிருத்திக் குழு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் பேச்சு

(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த 16 நாள்களாக மூடிக்கிடக்கின்ற திருக்கோவில் ஆதார வைத்தியசாலை திறக்கப்பட வேண்டும் என்று வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் திங்கட்கிழமை கொழும்பு சென்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினருடன் பேச்சு நடத்தினர்.




வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் தமது பக்கமுள்ள நியாயங்களை எடுத்து கூறினார்கள் பொலிஸார் இதுவரை எட்டு பேரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விளக்கமறியலில் வைத்துள்ளார்கள். ஏனைய விசாரணைகள் தொடர்கின்றன. வைத்தியசாலை மூடிக்கிடப்பதால் அப்பாவி பொதுமக்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு கொண்டிருக்கின்றார்கள் .எனவே, வைத்தியசாலையை திறந்து சுகாதார சேவையை மக்களுக்கு வழங்குமாறு வேண்டுகின்றோம் - எனக் கூறினார்கள்.

பதிலளித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் - இந்த தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற பட்சத்தில் நாங்கள் வைத்தியசாலையை திறப்பதற்கு உடன்படுவோம். அதுவரை எமது போராட்டம் தொடரும். - என்றனர். மொத்தத்தில் இச் சந்திப்பு தோல்வியில் முடிந்தது.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளதா? அதற்கான நிபந்தனைகள் உண்டா? என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

மேலும், இந்தக் கடன்கள் இலங்கை அரசினால் எடுக்கப்பட்டவையே தவிர, கடனைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பாகப் பேரம் பேசி கடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் தனிநபர்களால் அல்ல என்றும், இலங்கை அரசு என்று சொல்லும்போது, தற்போதுள்ள ஆளும் தரப்பும் வருங்கால ஆளும் தரப்பும் அடங்கும் என்பதால், அவர்களும் அதே பொறுப்புகளுக்குக் கட்டுப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச விதிகளை மதிக்காது தன்னிச்சையான முடிவுகளை எடுக்கும் நாடு, பெரும் அழிவை சந்திக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையை சிறிதளவேனும் மாற்றினால், நாம் வழங்கும் சர்வதேச கடன் கடிதங்களை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளாது, அப்படியானால், எமக்கு கனிம எண்ணெய், மருந்து வகைகள், உரங்கள், இரசாயனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன கிடைக்காது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு நாடு குறைந்தபட்சம் சர்வதேச கொடுப்பனவு தீர்வுகளுக்கு உடன்பட வேண்டும் எனவும், எந்தவொரு நபரும் தனது நாட்டுக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான உடன்படிக்கைகளை ஆராய வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்தின் இணையத் தளத்திலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(210) இயைபு முறைக் குறியீடுகளின் (HSCode) கீழ் வகைப்படுத்தல்களுக்கான 64 பொருட்களை இறக்குமதி செய்யும் போது வசதியளிப்பதற்காக தனிக்கூட்டு வரி அறவீட்டுக்காக 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விசேட வியாபாரப் பண்ட வரி விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வரி அறவீட்டை நடைமுறைப்படுத்தும் போது மேலெழுந்துள்ள பல்வேறு பிரச்சினைகளால் இவ்வரி அறவீட்டுச் சட்டத்தை இடைநிறுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டத்தை இடைநிறுத்துவதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் தற்போதைய பொருளாதார வேலைத்திட்டம் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்குடன் முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டுக்கு புதிய கல்வி முறையை அறிமுகப்படுத்த ஆளும் தரப்புச் செயற்பட்டு வருவதாகவும், அதற்காக பிரதமரின் செயலாளர் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பரீட்சை சுமையை குறைத்து பாடசாலை கல்வியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் ஆளும்தரப்பின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, பல்கலைக்கழக கட்டமைப்பில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றத்தின் கீழ் அந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு அனைவரினதும் ஆதரவு தேவை எனத் தெரிவித்த ஜனாதிபதி, 2035ஆம் ஆண்டளவில் நாட்டில் உயர்தரத்திலான கல்வி முறையை உருவாக்குவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு பல்கலைக்கழக கட்டமைப்பில் நல்லதொரு சூழல் இருக்கவேண்டும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பல்கலைக்கழக நிர்வாகத்தை வெளித்தரப்பினருக்கு வழங்குவதா அல்லது மாற்றங்களை மேற்கொண்டு பல்கலைக்கழக கட்டமைப்பில் புதிய சூழலை உருவாக்க வேண்டுமா என்பதை பல்கலைக்கழகங்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அண்மையில் களனி பல்கலைக்கழக திறப்பு விழாவில் கலந்துகொண்டபோது சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும், தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்ற தான் தவறவில்லை என்பதை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

கல்வித்துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல சீர்திருத்தங்கள் குறித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் கருத்துரைத்ததோடு, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட ஏனைய புத்திஜீவிகளால் அறிவை உருவாக்குதல், அந்த அறிவைப் பகிர்ந்தளித்தல், நாட்டின் தேசிய தேவைகளை நிறைவேற்றுதல் போன்ற சேவைகள் நிறைவேற்றப்படுவதாக இதன்போது வலியுறுத்தப்பட்டது.

பல்கலைக்கழக கட்டமைப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து பிரித்து சுயாதீன கல்வி நிறுவனங்களாக மாற்றுதல், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மாணவர்களுக்கு இன்றைய மாணவர்களின் தேவைக்கேற்ப தனித்துவமான தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய கற்கைநெறிகளை கற்க வாய்ப்புகளை வழங்குதல் மற்றும் அதற்காக பல்கலைக்கழக கட்டமைப்பில் தேவையான சூழலை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பல்கலைக்கழக கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைத்து பொருளாதார வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களிக்கும் நிறுவனங்களாக மாற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எழுப்பிய சில கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அளித்த பதில்களும் கீழே தரப்படுகின்றன.

கேள்வி: உலகின் பல நாடுகளில் தொழில் முனைவோர் கல்விக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, நமது நாட்டிலும் தொழில் முனைவோர் கல்வியை கட்டாயமாக்க பரிந்துரைக்கிறோம்.

பதில்: பல்கலைக்கழக பாடத்திட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் தற்போது கவனம் செலுத்தி வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இதற்காக பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இங்கு பெரும் பொறுப்பு இருக்கிறது.

கேள்வி: பல்கலைக்கழகக் கல்வியை முறைமைப்படுத்துவதற்கு, நாட்டின் சட்டங்கள் பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பதில்: அதை அரசாங்கத்தால் மாத்திரம் தனியாக செய்ய முடியாது. அது அனைவரும் இணைந்து செய்ய வேண்டிய பணி. ஆனால் மற்றவர்கள் அமைதியாக இருப்பது வருத்தம் அளிக்கிறது. 1980 களில் உருவாக்கப்பட்ட முறைமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. அந்த நிலைக்கு நாம் மீண்டும் செல்ல முடியாது. எனவே, புதிய நாட்டிற்கு ஏற்ற புதிய கல்வி முறையை அவசரமாக நாம் உருவாக்க வேண்டும். அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம். ஒரு மாணவனை பல்கலைக்கழகத்தில் இணைத்து நான்கு வருடங்களில் பட்டம் பெறுவது மாத்திரமன்றி.

பல்கலைக்கழகத்தில் விவாதிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் அரசியல்வாதிகள் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கலந்துரையாடல்களை நடத்தினர். இன்று அவ்வாறான சூழல் பல்கலைக்கழகங்களில் காணப்படவில்லை. அந்த நிலையை மீண்டும் நாம் உருவாக்க வேண்டும் என்றார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக்குவது, வறுமையை நிவர்த்தி செய்வது மற்றும் கல்வி முறையை சீர்திருத்துவது போன்றவற்றில் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வறுமையைக் குறைக்கும் தேசிய இலக்குடன் ஆளும் தரப்புச் செயற்படுகிறது. 2035ஆம் ஆண்டளவில் இலங்கை மக்களில் 10% மட்டுமே வறுமைப்பட்டவர்கள் என்பதை உறுதிப்படுத்துவது எமது நோக்கமாகும்.

இந்த பொருளாதார நோக்கங்களை அடைவதில் வலுவான நிறுவன கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் துல்லியமான தரவுகளை சேகரிப்பது முக்கியமானது. இந்தத் தரவுகள் ஊடாகக் கல்வி, சுகாதாரம் மற்றும் வருமான மட்டங்கள் போன்ற பல்வேறு பரிமாணங்களைக் கருத்தில் கொண்டு தீர்வுகளை அளிக்க வேண்டும்.

உத்தேச முகவர் நிறுவனத்தைச் செயல்படுத்தும் வகையில் இந்த ஆண்டின் நடுப்பகுதிக்குள் அதற்கான சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம். குறிப்பாக இந்து சமுத்திரப் பிராந்தியம் ஒரு பெரும் வளர்ச்சிப் பிராந்தியமாக உருவாகி வருவதால், இலங்கை போட்டிப் பொருளாதாரமாக மாறுவதற்கு இந்த சட்டவாக்க மற்றும் கொள்கை கட்டமைப்பு மிகவும் முக்கியமானது.

இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பாடசாலை மற்றும் உயர்கல்வி மட்டத்தில் கல்வி முறைமை பலப்படுத்தப்பட வேண்டும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் பாடசாலைகளுக்கு செயற்கை நுண்ணறிவை அறிமுகப்படுத்துவது பிரதான திட்டமாகும். மேலும் ஐந்து முதல் எட்டு ஆண்டுகளில் அனைத்துப் பாடசாலைகளையும் இந்தத்திட்டத்தில் ஈடுபடுத்தி பல்கலைக்கழகங்கள் வரை இதனை விரிவுபடுத்த எதிர்பார்க்கிறோம்.

இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை முன்னேற்ற இந்திய நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட நாம் எதிர்பார்க்கிறோம். குறிப்பாக, சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் கிளையை எமது நாட்டில் நிறுவுவதற்கும் அவர்களின் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி இரண்டு தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் உட்பட மூன்று பல்கலைக் கழகங்களை இங்கு முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருத்தமான மூலோபாயங்களைப் பின்பற்றி இலங்கையின் அபிவிருத்தித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு இந்திய நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தத்திட்டங்களைச் செயல்படுத்தக் கூட்டு ஒத்துழைப்பு அவசியம். 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இலங்கையை தயார்படுத்துவதில் நவீனமயமாக்கலைத் தழுவ வேண்டிய அவசரத் தேவை உருவாகியுள்ளது என்றார்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்: 2ஆவது நாளாகவும் கவனவீர்ப்புப் போராட்டம்







(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீ- தான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் இரண்டாவது நாளாக நேற்று (செவ்வாய்க்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மேற்படி பிரதேச செயலகத்தின் முன்பாக கடந்த திங்கட்கிழமை பொதுமக்கள் பல்வேறு சுலோ- கங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போரா- ட்டம் ஒன்றை முன்னெடுத்து இருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது நாளான இன்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகி- ன்றனர்.

இந்தப் போராட்டத்திற்கு வலு சேர்க்கும் முகமாக நேற்று அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்- டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் காரைதீவு பிரதேச சபை- பயின் முன்னாள் தவிசாளர் கிருஸ்னபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயற்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதே- தச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீ- காரம் பெற்று தனியான பிரதேச செயலகமாகக் கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் ஊடகங்களிடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறை- றகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவ- தன் காரணமாகப் பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிர்வாக அடக்குமுறை- களையும் கண்டித்தும்

திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த பிரதேச செயலக விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்- த்தப்பட வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதப் போராட்டம் பல அரசியல்வாதிகள் பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் போராட்டத்தை கைவ- ிடும் நிலை ஏற்பட்டிருந்தது.

மேற்குறித்த உண்ணாவிரதப் போராட்டம் அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தித் தரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிரதேச செயலகத்தின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.இதில் கல்முனை சுபத்திர- ாம விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றிய தலைவர் ஸ்ரீ க.கு.சச்சி- தானந்தம் சிவம் குரு, கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சா.சந்திரசேகரம் ராஜன் மற்றும் அழகக்கோன் விஜயரத்னம், ஐக்கிய வணிகர் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணபிள்ளை லிங்கே- கஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## யாழ். பல்கலையில் உலக நாடக விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்துலக நாடக விழா இன்று (புதன்கிழமை) பல்கலைக்கழக கைலாச பதி கலையரங்கத்தில் காலை 10 மணி முதல் மாலை 04.00 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ்.பல்லைக்கழகத்தின் துணைவேந்தர் பேராச- ிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா முதன்மை விருந்தினராகவும் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் சிறப்பு விருந்திராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ள உலக நாடக தினவிழாவில் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்க- ளின் நாடகங்கள் மற்றும் தொழில்வாண்மை நாடகக் கலைஞர்களின் நாடகங்கள் இடம்பெறவுள்ளன. பல்கலை- லக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் இவ்நாடக விழாவில் பங்கேற்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

## திருகோணமலை மாவட்டத்தில் கடாட்சம் நூல் வெளியீடு

(ஹஸ்பர் ஏ.எச்)

சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தின் ஒழுங்கமை- ப்பில் ' கடாட்சம்' நூல் வெளியீடும் இலக்கியப் பணிக்கான பாராட்டு நிகழ்வும் 29-03-2024 வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு திருகோணமலை பொது நூலக மண்டபத்- தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வு சம்பூர் தமிழ்க்கலாமன்றத்தின் தலைவர் மருத்துவர் அ . சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும்.

மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, நூல் நயவுரை, நூல் வெளியீடு, கருத்துரைகள், பாராட்டு நி- கழ்வு என்பனவும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## மீனுக்கு தான் வீசிய வலையில் தானேசிக்கி இளைஞர் இறப்பு

### வாழைச்சேனையில் பரிதாபம்

மட்டக்களப்பு வாழைச்சேனை, புனானையில் குளம் ஒன்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் தான் பயன்படுத்திய வலை- லயில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில், வாழை- ழச்சேனை பொலிஸாரிடம் உயி ரிழந்தவரின் தந்தை திங்கட்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் புனானை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடையவராவார்.

உயிரிழந்தவர் சுகவீனம் காரணமாக வேலையின்றி வீட்டில் இருந்தார் எனவும் இந்நிலையில் திங்கட்கிழமை குளத்தில் மீன்பிடி- த்துக் கொண்டிருந்த போது அவர் பயன்படுத்திய மீன் வலையில் சிக்கி நீரில் மூழ்கி உயிரிழந்- துள்ளார் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (05)

## பருத்தித்துறையில் விபத்து தப்பிச் சென்றது வாகனம்

### பெண் படுகாயம்

யாழ்- பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்- காண்டிருந்த பெண்ணொருவரை ஹயஸ் ரக வாகனம் ஒன்று மோதி விட்டு தப்பி சென்றுள்ளது.

விபத்தில் துன்னாலை மேற்கை சேர்ந்த குமரேசமூர்த்தி வனிதா (வயது 51) எனும் பெண்ணே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வை- த்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மந்திகை பகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி கிளைக்கு அருக- ில் திங்கட்கிழமை குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்து சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசார- ணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பிரதான வீதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் உள்ள கண்காணிப்பு கமெராக்களின் உதவ- ியுடன், விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச்சென்ற ஹயஸ் வாகனத்தை அடையாளம் கண்டுள்ளதாகவும், அதன் சாரதியை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர . (05)

## ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் வத்தளையில் கைது

வத்தளை பிரதேசத்தில் பொ- லிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடவ- டிக்கையை மேற்கொண்ட போது போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 05 கிராம் 400 மில்லி கிராம் ஹெரொயின் போதைப் பொருள் கைப்பற்ற- ப்பட்டுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் ஹெந்தல பிரதேசத்தை- தச் சேர்ந்த 44 வயதுடையவராவார்.

இந்த சம்பவம் தொடர்பாக வத்- தளை பொலிஸார் மேலதிக விசார- ணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## கல்கிஸ்ஸவில் ஒருவர் ஹெரோயினுடன் கைது

கல்கிஸ்ஸ, படோவிட்ட பிரதேச- த்தில் கல்கிஸ்ஸ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைதுெ- சய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 7 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடயவராவார். இந்த சம்பவம் தொடர்பாக, கல்கிஸ்ஸ பொ- லிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

## கிராமங்களின் மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வவுனியாவில் தானியங்கள் வழங்கி வைப்பு

*கிராமிய மக்களின் பொருளா- தார மேம்பாட்டுக்காக குளங்கள், கிராமங்கள் மறுமலர்ச்சி திட்டத்- தின் கீழ் வவுனியாவில் தான- ியங்கள் வழங்கி வைக்கப்பட்டன.*

*நீர்பாசன அமைச்சின் கீழ் குளங்கள், கிராமங்களின் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கிராமிய மக்களின் பொருளா- தார மேம்பாட்டுக்காக பயிர்ச்செ- சய்கைக்கான தானியங்கள் வழங்கும் வேலைத் திட்டம் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.*

*அதனடிப்படையில், வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தானியங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்- துள்ள கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தல் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெ- ற்றது.*

*இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குளங்களின் கீழான பயிர்ச் செய்கைக்காகக் கச்சான், கௌப்பி, பயறு, உழுந்து என்பன வழங்கப்படவுள்ளன. அதில் முதல் கட்டமாக கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சம- ணங்குளம் பகுதியைச் சேர்ந்த 9 விவசாயிகளுக்கு கௌப்பி பயிற் செய்கைக்காக விதைக் கௌ- ப்பி வழங்கி வைக்கப்பட்டதுடன், பயிற் செய்கை தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.*

*நிகழ்வில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி காஞ்சனா, கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.*

*(05 - 100)*

# ஒற்றுமையின் மூலமே நாம் முன் னேற்றம் அடையலாம்

**பாலமுனையில் சபீஸ் கருத்து**

(கே எ ஹமீட்)

பாலமுனையில் புதிதாக கிழக்கின் கேடயத்தில் அங்கத்தவராக இணைந்துகொண்ட இளைஞர்கள் மத்தியில் உடை-ரயாற்றும் போது நாம் சமூகமாக முன்னேறவேண்டும் என்றால் இளைஞர்கள் தொடர்ச்சியாக அறிவைப் பெருக்கிக்கொள்வதோடு ஒருமைப்பாட்டுடன் ஒன்றிணைந்து செயற்படுவதாலேதான் நாம் சமூகமாக முன்னேற முடியும் என அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னால் தலைவரும் கிழக்கின் கேடயத்தின் தலைவருமான எஸ் எம் சபீஸ் தெரிவித்தார்.

மேலும் அங்கு பேசுகையில் -

புத்தாக்க கல்வி அறிவை அடித்தளமாக கொண்ட சமூகமாக நாம் வளரவேண்டும் அத்துடன் ஒருமைப்பாட்டுடன் எல்லோரும் சேர்ந்து இயங்கும் முறைமைக்குள் நாம் உள்வாங்கப்படுகின்றபோது நமது சமூகம் பொருளாதார ரீதியான முன்னேற்றத்தை பிரசவித்துக்கொள்ளும் அந்த முறையை கொண்டுவருவதே எங்களது முதல் பணியாகும் எனத் தெரிவித்தார்.

கிழக்கின் கேடயத்தின் அங்கத்தவர் சட்டக்கல்லூரி மாணவன் அசாம், உலமாக்கள், கிழக்கின் கேடயம் அமைப்பின் பொருளாளர் ருஸ்தி அஹ்மத் உறுப்பினர் அமீர்,ஆலோசகர் ஹனீபா அதிபர் ,அங்கத்தவர்ரான அர்சாத் மற்றும் அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## வீதியில் மது அருந்திய நபர் தன்னை பொலிஸ் என்றதால் பெரும் பரபரப்பு

வவுனியா, நெடுங்கேணி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர் திங்கட்கிழமை பொலிஸ் நிலையம் முன்பாக உள்ள பிரதான வீதியில் மது அருந்தும் காணொளி ஒன்று வெளியாகி உள்ளது.

திங்கள்கிழமைஇரவுவேளையில் குறித்த உத்தியோகத்தர் பிரதான வீதியில் பொலிஸ் நிலையம் முன்பாக மது அருந்திக்கொண்டு இருக்கும் போது குறித்த பகுதிக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் அவரிடம் சென்று வீதியில் மது அருந்தக் கூடாது என்பது தெரியாதா..? என்று கேட்க, அவரை ஒருமையில் பேசியுள்ளதுடன் தான் பொலிஸ் உத்தியோகத்தர் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன், குறித்த பகுதிக்கு வந்த மேலும் ஒருவர் நான் பார்த்துக் கொள்கிறேன் நீ போ என்று தெரிவிக்கின்ற காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. அவரும் மது போதையில் வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொது இடத்தில் இருந்து மது அருந்தியமை தொடர்பில் 119 என்ற பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அறிவித்த போதும், பொலிஸார் குறித்த முறைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்த வில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரிவழிபாடுகள் இடம்பெறும் போது, நெடுங்கேணி பொலிஸார் வழிபாடு செய்தவர்களிடம் காட்டு மிராண்டி தனமாக நடந்த கொண்டிருந்ததுடன் 8 பேரை கைதும் செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 100




# கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கான காணி அளவீட்டுக்குக் கடும் எதிர்ப்பு

## போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அதிகாரிகளை திருப்பி அனுப்பினர்





யாழ்ப்பாணம் - கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக சுவீகரிக்கும் அடிப்படையில் அளவீடுகள் செய்வதற்கு நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில் வருகை தந்திருந்தனர்.

இதன் போது குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அளவைத் திணைக்களத்தின் வாகனத்தையும் இடைமறித்தனர். பின்னர் நீண்ட நேர காணி உரிமையாளர்களின் எதிர்ப்பை அடுத்து காணியை அளவீடு செய்வதற்கு தமக்கு விருப்பம் இல்லை என காணி உரிமையாளர்கள் கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கியதை அடுத்து நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

குறித்த பகுதியில் அதிகமான பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவின்கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே-226), காங்கேசன்துறை (ஜே-233) கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான், புதுக்காடு, சோலைசேனாதிராயன் என அழைக்கப்படும் பகுதிகளில் 12.0399 ஹெக்டயர் ( 29 ஏக்கர் 3 றூட் 0.20 பேர்ச் ) நிலம் அளவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியாவில் இப்தார் தின நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு





(எச். எம் ஹலால்தீன் )

கிண்ணியா மாஞ்சோலை முகைதீன் ஜ/ம்மா சந்திப் பள்ளிவாசலில் இப்தார் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்துக்கோரல, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இனங்களுக்கு இடையிலான நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக இந்த இஃப்தார் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (05)

# கல்வி உதவிக்கான காசோலை வழங்கல்






(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அங்கவீனமுற்ற பெற்றோர்களது பிள்ளைகளுக்கான கல்வி உதவிக்கான காசோலைகள் மற்றும் அங்கவீனமுற்றோர்க்கான மருத்துவ போக்குவரத்து உதவிக் கொடுப்பனவிற்கான காசோலைகள்,சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல். முஹம்மட் ஹனீபா தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல். சர்தார் மிர்ஸா, சமூக சேவை உத்தியோகத்தர் ,பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2024இல் வெளியிடப்பெற்றது